தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1975 மார்ச் 12.

TAMIL NADU LEGISLATURE 25 OCT 1975 MADRAS

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Archaeological survey in Brihadeeswarar temple

* 281 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that an idol of Lord Siva was unearthed by the Archaeological Survey of India at Sri Brihadeeswarar Temple in Thanjavur in recent times; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சமீபத்தில் ஒரு சிவன் சிலை கிடைத்துள்ளது. அச்சிலை சோழர் கலைப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, அந்தச் சிலையினுடைய முக்கியத்துவம் என்ன? எதை எதைப்பற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தஞ்சையிலுள்ள பெரிய கோவிலைத் துப்புரவு செய்யும் போது, தலை மட்டும் உள்ள அர்த்தநாரீச்வரர் சிலையொன்று சமீபத்தில் கிடைத்துள்ளது. உயரம் 1 அடி 9 அங்குலம். அது, முதலாவது இராசேந்திரன் காலத்தைச் சேர்ந்தது என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளரால் கருதப்படுகிறது. அந்தக் கோவிலைச் சுற்றி அகழ்வாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட பிற பொருள் ருடன் மத்திய அகழ்வாய்வுத் துறையினரால் அக்கோயிலிலேயே

அமைக்கப்பட்ட நிலையான சோழர் கலைப்பொருட்காட்சியில் அச்சிலை வைக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு சிலைதான் அந்த இடத்தில் கிடைக்கப்பட்டது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சை பெரிய கோயில் இராச இராச சோழ மன்னன் புகழுக்கு மகுடம் வைத்த தாகும் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோயிலைச் சுற்றி பல அற்புதங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அதை மேலும் அகழ்வாராய்ச்சி செய்து அதில் இருக்கின்ற பழைமை யான பொருள்களை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, மைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் மாநில தொல் பொருள் ஆராய்ச்சித் துறையும் அதுபற்றி அகழ்வாராய்ச்சி செய்து வருகிறார்கள். அவற்றில் இப்படிப்பட்ட கோவில் சம்பந்தமான பொருள்கள்தான் கிடைக்கப் பெறுகின்றன. அவை யெல்லாம் அந்தக் கோயில் மண்டபத்திலேயே அமைக்கப் பட்டிருக்கிற சோழர் கலைப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக் கின்றன.

தஞ்சை கலைக்கூடம்

* 282 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை கலைக் கூடத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சை கோவிலுக்குள்ளேயே ஓவியக்கூடம் ஒரு சிறப்புக்குரியதாக இருக்கிறது. அந்த ஓவியக்கூடம் மத்திய அரசால் சரிவர பாதுகாக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே, அது உண்மையா?